# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 23.08.2022 | supeedsam.com | supeedsam@gmail.com





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com


## ஆதரவு கோரிய ரணில்;

# மீண்டும் மறுத்த சஜித்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தை இன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி மீண்டும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்தார்.

ஆனால் பாராளுமன்ற முறைமையின் கீழ் எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்தின் பிரேரணைகளை ஆதரிக்க எதிர்க்கட்சி தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சுப் பதவிகள் நாட்டுக்கு சுமையாக மாறியுள்ளதாகவும்,

02 ஆம் பக்கத்தில்...

## ரணில் அரசுக்கு ஆதரவு கோடுக்க மாட்டோம்



எங்களது கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாதுவிடின் நாம் ஒருபோதும் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு தரமாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## பாண் ஒன்றின் விலையை 50 ரூபாவால் குறைக்க முடியும்

அரசாங்கம் தலையீடு செய்யுமாயின் பாண் ஒன்றுக்கான விலையை 50 ரூபாவாலும், பணிஸ் ஒன்றின் விலையை 25 ரூபாவாலும் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் என்.கே ஜயவர்தன இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்தார். வெதுப்பக தொழிற்துறையை தற்போது கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கோதுமை மா உள்ளிட்ட மூலப்பொருட்களின் பாரிய விலை அதிகரிப்பு காரணமாக வெதுப்பக

02 ஆம் பக்கத்தில்...

## வெளியேறியது சீனக் கப்பல்



இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சீனாவின் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் 5, இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி

## நாடு பாரிய சிக்கலை எதிர்நோக்கும்!

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு தேசிய ரீதியில் மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் பாரிய சிக்கலான இடத்தை நோக்கி தள்ளப்படும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மாத்திரமல்லாது மனித உரிமைகள் எதுவும் இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில்

02 ஆம் பக்கத்தில்...



## கோட்டாவுக்கு தோலைபேசி அழைப்பேடுத்த ரணில்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீண்டும் இலங்கை திரும்பி வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கோட்டாவை தொடர்பு கொண்டுள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றின் போது,விடுத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி, கோட்டாபய ராஜபக்சவை தொடர்புக்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்புவதற்காக

02 ஆம் பக்கத்தில்...

## இன்றும் நாளையும் திருமலையில் நடைபேற இருந்த ஆசிரியர் நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு




( வி.ரி. சகாதேவராஜா)

திருகோணமலை மாவட்டத்திற்கான பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளும் நேர்முக பபீட்சை இன்று(23) செவ்வாய்க்கிழமையும் நாளை (24) புதன்கிழமையும் திருமலையில் நடைபெற இருந்தது.

இரண்டு நாட்களுக்குமான நேர்முகப்பபீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணை குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் தெரிவித்தார்.

நேர்முகப்பபீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு!

ஜனாதிபதியின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்க விரும்பவில்லை என தெரிவித்த ஜனாதிபதி, 24 மணி நேரத்திற்கு பின்னர் பொதுமக்கள் அமைதியைப் பேணுவதற்காக, முப்படையினரை ஈடுபடுத்த அதிகாரம் வழங்கியுள்ளதாக விமர்சனம் வெளியிட்டார்.

02 ஆம் பக்கத்தில்...

### ஒரு மில்லியன் ரூபாவுக்கு

## ஏலம் போன மாம்பழம்



மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் போன நிகழ்வொன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மரக்காரம்பளை வீதி கணேசபுரத்தில் அமைந்துள்ள ஶ்ரீ சித்திவிநாயகர் ஆலய அலங்கார திருவிழாவின் ஆறாம்நாள் திருவிழா ஓகஸ்ட் 21ஆம் திகதி நடைபெற்றது.

அன்று இறைவனுக்கு படைக்கப்பட்ட மூன்று மாம்பழங்களும் , ஒரு மாலையும் ஏலத்தில் விடப்பட்டது. போது கடும் போட்டிகளுக்கு மத்தியில் சபரிராஜன் என்ற மாணவன் அவற்றை

02 ஆம் பக்கத்தில்...

## பல்கலைக்கழகங்கள் செப். முதல் ஆரம்பம்

இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் செப்டெம்பர் மாதம் முதல் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் சாதாரண நிலை காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

கொரோனா தொற்று மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக, பெரும்பாலான

02 ஆம் பக்கத்தில்...

# நாட்டை நாசமாக்கிய கள்ளர்கள் யார்:
## ஆதாரங்களை வெளியிடத் தயாராகும் முன்னாள் அமைச்சர்

கடந்த மே 9 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை நாட்டுக்குள் நடந்த வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுமாயின் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் சாட்சியங்களுடன் தகவல்களை வழங்க தயார்.



வன்முறைகள் ஏற்பட காரணம், அவற்றின் பின்னணியில் இருந்தது யார் என்பதை கண்டறிய உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்லும் சூழ்ச்சிகளை நாட்டிற்குள், நாட்டுக்கு வெளியிலும் உள்ள சக்திகள் மாத்திரமன்றி, அரசாங்கத்திற்கு உள்ளேயும் அப்படியான சக்திகளும் மேற்கொண்டன என்பது மிகவும் தெளிவானது.

ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டால், தவறான முடிவுகளை எடுத்து நாட்டை இந்த நிலைமைக்கு தள்ளியவர்கள், கவனமின்றி தவறான முடிவுகளை எடுத்தவர்கள் யார் என்பதை சாட்சியங்களுடன் வெளியிட தயாராக இருக்கின்றேன் என என தெரிவித்துள்ளார்.

# யாழில் வாகனத்தைவிட்டு இறங்காத அமைச்சர்

யாழ்ப்பாண நெடுந்தூர பஸ் நிலையத்தை, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன வாகனத்தில் இருந்து இறங்காது அதில் சென்றவாறே பார்வையிட்டார்.

குறித்த நெடுந்தூர பஸ் நிலையம் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் பந்துல குணவர்த்தன, பஸ் நிலையத்திற்கு செல்வதற்கு ஏற்பாடுகள், நேற்றுமுன்தினம் (21) செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் வாகனத்தில் இருந்தவாறே பஸ் நிலையத்தை பார்வையிட்டுவிட்டு, ஒருசில நொடிகளில் அங்கிருந்து சென்றார். இதனால் அமைச்சருடன் கலந்துரையாடுவதற்காக வந்திருந்த அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மேலும், நகர அபிவிருத்தி மற்றும் கரையோர பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் சுமார் 120மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையம், 2021 ஜனவரி மாதம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



இருந்த போதும் இன்னமும் மக்கள் பாவனைக்கு வராத நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் குறித்த பஸ் நிலையம் பராமரிப்பற்ற இடமாக மாறி வருவதுடன், சமூகத்துக்கு பிறழ்வான நடத்தைகள் இடம்பெற்று வருவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

எனவே குறித்த பஸ் நிலையத்தை இயக்குவதற்கு பல்வேறு தரப்பினர் முயற்சித்த போதும் கூட இலங்கை போக்குவரத்துச் சபை அங்கிருந்து சேவையை மேற்கொள்ள மறுத்து வருவதால், பஸ் நிலையம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கரும்பு சாறு பிழியும் இயந்திரம்
# கல்முனை சமூக சேவையாளர் லதனினால் அன்பளிப்பு!

**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனையின் பிரபல சமூக சேவையாளர் கே.பிரகலாதன் ( லதன்) கரும்புச்சாறு பிழியும் இயந்திரம் ஒன்றை வாழ்வாதாரம் வேண்டிய மகளிருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பரோபகாரி லதன் இந்த இயந்திரத்தை காரைதீவு பிரதேச செயலகத்திற்கு ட்பட்ட மகளிருக்கு பிரதேச செயலாளர் முன்னிலையில் வழங்கி வைத்தார்.

இந்த இயந்திரமானது இந்



தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டது.

இதன்மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்த கூடியதாக இருக்கும்.

ஒரு கப் கரும்புச்சாறு 100 ரூபாய்க்கு விற்பனை செய்யக் கூடியவாறு இந்த இயந்திரம் வடிவமைப்பு செய்யப்பட்டிருக்கின்றது .

இதே போன்ற மற்றுமொரு இயந்திரம் கல்முனை பிரதேசத்திற்கும் வழங்குவதற்கு பரோபகாரி லதன் ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி நாடு பாரிய சிக்கலை ...

கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு நான் சில திருத்தங்களை முன்வைத்தேன். முழு சட்டமூலமும் மீளாய்வு செய்யப்படும் வரை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவசரப்பட வேண்டாம்.

அடுத்த இரண்டு வாரங்களில் ஜெனிவாவில் மனித உரிமை பேரவையின் 51வது கூட்டத் தொடர் ஆரம்பமாக உள்ளது. செப்டம்பர் 12 ஆம் திகதி. இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தைக்கு தயாராகி வருகிறது.


ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை எமது நாட்டின் ஏற்றுமதிக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், இந்த அனைத்து துறைகளும் பாதிப்புக்கு உள்ளாகும். இந்த சட்டத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். அதேபோல் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்தது.

அதற்கு ஆதரவளிப்பதில்லை என நாங்கள் தீர்மானித்தோம். அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் எந்த தேவையும் இருக்கவில்லை. இதனை விட மோசமான சட்டமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தயாராகி வருகின்றனர்.

மேலும் வசந்த முதலிகே என்ற மாணவனை 90 தடுப்பு காவலில் வைப்பதற்கான உத்தரவை பெற்றுக்கொண்டனர். இதில் இருக்கும் பயங்கரவாதம் என்ன?.

அதில் பயங்கரவாதம் இருப்பதாக நாங்கள் காணவில்லை எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய மின்வெட்டு அட்டவணை



TUESDAY 08/23 செவ்வாய்

Approved Power Interruption Schedule
அங்கீகரிக்கப்பட்ட மின்தடை அட்டவணை

| Electricity Supply Disconnection Time<br>மின்சார விநியோகம் தடை நேரம் | Electricity Supply Restoration Time<br>மின்சார விநியோகம் திரும்பும் நேரம் | Group<br>பிரிவு | Duration<br>காலம் |
|---|---|---|---|
| 5:30AM - 5:50AM | 8:30AM - 8:50AM | M, N, O, X, Y, Z (BOI Zones) | 3hrs |
| 6:00AM - 6:20AM | 8:30AM - 8:50AM | CC (Colombo City Commercial Zones) | 2hrs 30min |
| 1:00PM - 1:30PM | 2:40PM - 3:10PM | A, B, C, D, U, V | 1hr 40min |
| 2:40PM - 3:10PM | 4:20PM - 4:50PM | I, J, K, L, W, P, Q | |
| 4:20PM - 4:50PM | 6:00PM - 6:30PM | E, F, G, H, R, S, T | |
| 6:00PM - 6:30PM | 7:20PM - 7:50PM | A, B, C, D, U, V, W | 1hr 20min |
| 7:20PM - 7:50PM | 8:40PM - 9:10PM | I, J, K, L, P, Q, R | |
| 8:40PM - 9:10PM | 10:00PM - 10:30PM | E, F, G, H, S, T | |

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
Public Utilities Commission of Sri Lanka

## பல்கலைக்கழகங்கள் செப். முதல் ஆரம்பம்

பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் ஒன்லைனில் இடம்பெற்று வருகின்றன. கடந்த சில மாதங்களாக மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்கு சமுகமளிக்காத நிலை காணப்பட்டிருந்த நிலையில், செப்டெம்பர் முதல் நேரடியாக சமுகமளிக்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் எடுத்துள்ளார்.

கிராமப்புற ஆலயம் ஒன்றில் இவ்வாறு பெரிய தொகைக்கு மாம்பழங்கள் ஏலம் எடுக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஏலத்தில் கிடைக்கப்பெற்ற பணம், ஆலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதியின் பேச்சுக்கும் செயலுக்கும்...

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தற்போது பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் மோசமான வகையில் பயன்படுத்தப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கை நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த போது சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதியை மீறும் செயல் என இம்தியாஸ் பக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

## கோட்டாவுக்கு தொலைபேசி அழைப்பெடுத்த ரணில்

வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறு பசில் ராஜபக்ச, ஜனாதிபதியிடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை திரும்பவுள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியாகிய போதிலும் அவர் அதனை இதுவரை உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாண் ஒன்றின் விலையை 50 ரூபாவால்...

உற்பத்திகளின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

பாண் மற்றும் பணிஸ் என்பனவற்றை பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியாத நிலை உள்ளது.

அரசாங்கம் மற்றும் அதனுடைய நிறுவனங்கள் உதவி வழங்குமாயின் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையினை குறைக்க முடியும். இதனடிப்படையில் அரசாங்கம் தலையிடுமாயின் பாண் ஒன்றை 50 ரூபாவினாலும், பணிஸ் ஒன்றை 25 ரூபாவினாலும் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

## ரணில் அரசுக்கு ஆதரவு கொடுக்க மாட்டோம்

ஏற்கனவே நாங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றோம். தொடர்ச்சியாக பயமுறுத்தலும் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை வைத்துகொண்டு பல இளைஞர்களை கைது செய்வதும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.

எங்களை பொறுத்தமட்டில் ஜனாதிபதிக்கும் கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றோம். பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

தொடர்ச்சியாக தமிழர் தரப்பிலே கைது செய்யப்படுகின்ற நிலைமைகளும் கூடுதலாகவே காணப்படுகின்றது. இந்த விடயத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாட்டை ஜனாதிபதி செய்ய வேண்டும்.

இல்லையென்றால், எங்களுடைய ஆதரவு இந்த அரசாங்கத்துக்கு ஒருபோதும் இருக்காது என்றார்.

## ஆதரவு கோரிய ரணில்...

அமைச்சுப் பதவிகளுக்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுபுறம் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டால் அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது, ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் எதிர்க்கட்சியாக இருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.



## கிழக்கு மாகாணத்தில் இதுவரை

# ஒரு தமிழர் ஆளுனராக நியமிக்கப்படவில்லை



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர், மட்டக்களப்பு

> **கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 39 சதவீதத்திலும் சற்று அதிகமாகத் தமிழர்களும், 37 சதவீதத்திலும் சற்று அதிகமாக முஸ்லிங்களும், சிங்களவர்கள் 23 சதவீதமாகவும் வாழ்கின்றனர். அந்தவகையில் இந்த மாகாணத்தில் சுமார் 77 சதவீதம் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றனர். அவ்வாறு இருந்தாலும் கிழக்கு மாகாணசபை பிரிந்ததன் பின்னர் ஐந்து சிங்களவர்களும் ஒரு முஸ்லிமும் ஆளுனர்களாக பதவி வகித்துள்ளனர். இதுவரை கிழக்கில் பெரும்பான்மையாக வாழுகின்ற ஒரு தமிழர் கூட ஆளுனராக நியமிக்கப்படவில்லை. தமிழர்களின் போராட்டம், அவர்களது பல்லாயிரக்கணக்கான உயிர்களின் இழப்புகளின் பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.**

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக 1987 ஆம் ஆண்டில் மாகாணசபை முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது.ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையாகக் காணப்பட்டது.பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கொன்றின் தீர்ப்பு மூலமாக வடக்கு கிழக்கு மாகாணசபைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அதனையடுத்து கிழக்கு மாகாணசபை 2008 இல் இருந்து இன்றுவரை தனித்து இயங்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 39 சதவீதத்திலும் சற்று அதிகமாகத் தமிழர்களும்,37 சதவீதத்திலும் சற்று அதிகமாக முஸ்லிங்களும்,சிங்களவர்கள் 23 சதவீதமாகவும் வாழ்கின்றனர்.அந்தவகையில் இந்த மாகாணத்தில் சுமார் 77 சதவீதம் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றனர்.அவ்வாறு இருந்தாலும் கிழக்கு மாகாணசபை பிரிந்ததன் பின்னர் ஐந்து சிங்களவர்களும் ஒரு முஸ்லிமும் ஆளுனர்களாக பதவி வகித்துள்ளனர்.இதுவரை கிழக்கில் பெரும்பான்மையாக வாழுகின்ற ஒரு தமிழர் கூட ஆளுனராக நியமிக்கப்படவில்லை.தமிழர்களின் போராட்டம்,அவர்களது பல்லாயிரக்கணக்கான உயிர்களின் இழப்புகளின் பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.



இவ்வாறு பெறப்பட்ட கிழக்கு மாகாணசபையில இன்னுமோர் தமிழர் ஆளுனராக நியாமிக்கப்படாமை தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தும் பாரபட்சம் காட்டப்படுவதற்குரிய பல சான்றுகளில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

23 சதவீதமாக சிங்கள மக்கள் உள்ள நிலையில் 2008 இன் பின்னர் 14 ஆண்டுகளுக்குள் 5 சிங்கள ஆளுனர்கள் நியமிக்கப்பட்டமை சிங்கள மேலாதிக்கத்தின் அப்பட்டமான சாட்சியமாகவுள்ளது.

அதேவேளை ஒரு முஸ்லிமாவது ஆளுனராக நியமிக்கப்பட்டுள்ளார்.எனவே ஜனாதிபதியான ரணிலாவது தமிழ்ர் ஒருவரை ஆளுனராக நியமிப்பாரா? என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.கிழக்கு மாகாணத்தில் ஊழல் மோசடியற்ற நிருவாகத்தேர்சசி மிக்க ஆளுமையுள்ள பல்லின சமூகங்ஙகளைப் பரிபாலிக்கக் கூடிய தமிழ் நிருவாக அதிகாரி ஒருவரை ஆளுனராக நியமித்தால் அது வரவேற்கத்தக்கதாக அமையும். தமிழர் ஒருவர் இதுவரை கிழக்கு மாகாணத்தில் ஆளுனராக நியமிக்கப்படவில்லை என்ற குறையும் தீர்ககப்பட்டுவிடும்.



# மண்ணெண்ணெய் விலை உயர்வால் உச்சத்தில் மீன்களின் விலை!

## மக்களும் மீனவர்களும் திண்டாட்டம்

**(காரைதீவு நிருபர் சகா)**

திடீரென அதிகரித்த மண்ணெண்ணெய் விலை உயர்வால் மீன்களின் விலைகள் விசம் போல் அதிகரித்துள்ளது.

ஏலவே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, என்றுமில்லாதவாறு மீன்களின் விலை அதிகரித்திருந்தது.

தற்போது மண்ணெண்ணெய் விலை உயர்வால் மேலும் மீன்களின் விலை எகிறியுள்ளது.

இதனால் ,மக்கள் மட்டுமன்றி மீனவர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமானது.

கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதற்கு மண்ணெண்ணெய் அதிகமாக தேவைப்படுவதனால், தற்போது கடற்றொழில் ஈடுபடுவது மிகவும் குறைவடைந்துள்ளது.

இதனால், கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தையில் மீன்களின் விலைகளும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால், மக்கள் மீன்களை கொள்வனவு செய்வதில் நாட்டம் காட்டுவதில்லை. அல்லது தங்களது தேவைகளுக்கு குறைவான வகையிலே மீன்களை கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

மீன்களின் விலை அதிகரிப்பு குறித்து சாதாரண மக்கள் அதிருப்தி தெரிவிப்பதை போலேவே, மீன் வியாபாரிகளும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

சமகால அம்பாறை மாவட்ட சந்தையில் மீன்களின் விலைகள் சொல்லொணாத அளவில் அதிகரித்து வருகிறது.

சில மீன்களின் விலை இங்கே தரப்பட்டுள்ளன.

01 கிலோ அறுக்குளா 4000/-,01 கிலோ தோறா 3500/-,01 கிலோ வெளவல் 3500/-

,01 கிலோ கிளவல்லா 2500/- , 01 கிலோ கணவா 2000/-

01 கிலோ நெத்தலி 1600/-,01 கிலோ பாரை 3500/-,01 கிலோ சூடை 1500/-,01 கிலோ இறால் 2000/-,01 கிலோ செத்தல் 1200/-

01 கிலோ சுங்கான் 2000/-,01 கிலோ விரால் 2200/-,01 கிலோ செப்பலி 1000/-,01 கிலோ சாளை 1000/- இவ்விதம் மீன்கள் விற்பனை செய்ய பட்டு வருகிறது.

# வழிகாட்டல் செயலமர்வு





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

ரோட்டரி கொழும்பு மிட்சிட்டி மற்றும் ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகங்களின் அனுசரணையில் தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு ஒன்று நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் ரோட்டரி கழகத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் குமார் சுந்தரராஜ், ரோட்டரி கொழும்பு மிட்சிட்டியின் தலைவர் சலீக்க, ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகத்தின் தலைவர் வினோஷா கயாலினி, நுவரெலியா வலயக்கல்வி உதவி பணிப்பாளர் சாந்தகுமார், பாடசாலையில் அதிபர் கிருஸ்ணசாமி மற்றும் ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்கள், மூத்த அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# தோழிற்சாலையில் 1 1/2 கோடி கொள்ளை சம்பவம்; ஐவர் கைது



**(பாறுக் ஷிஹான்**

சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் பெறுமதியான மோட்டார் மற்றும் மின் உபகரணங்களை கொள்ளையிட்டு சென்ற 5 சந்தேக நபர்கள் காரைதீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் உள்ள உருக்கு இரும்பு தொழிற்சாலையில் இக்கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை குறித்த தொழிற்சாலையின் பாதுகாப்பிற்காக போடப்பட்ட பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நுணுக்கமாக பொருட்கள் கொள்ளையிடப்பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து உரிமையாளர் தொழிற்சாலையில் பாரிய கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து முறைப்பாடு ஒன்றினை அன்றைய தினம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் வழங்கி இருந்தார்.

குறித்த முறைப்பாட்டிற்கமைய அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க உத்தரவிற்கமைய கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச். டி .எம். எல். புத்திக ஆலோசனையில் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்டன் ஜெகத் வழிநடத்தலில் காரைதீவு பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பரிசோதகர் ஏ.எல்.எம். அஸீம் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு உரிமையாளர் உட்பட பணியாளர்களின் வாக்குமூலங்களை பெற்று நடவடிக்கையில் இறங்கினர்.

இதன் போது குறித்த கொள்ளைச் சம்பவத்தில் பிரதான சந்தேக நபர் இனங்காணப்பட்ட நிலையில் அவரை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட பொலிஸ் குழு அவரை அணுகி புலனாய்வு நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்நிலையில் பல வருடங்களாக குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வந்த சந்தேக நபர் இன்று (22) திங்கட்கிழமை அதிகாலை கைதானதுடன் கொள்ளைச் சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட ஏனைய நால்வர் கைதாயினர்.

இவ்வாறு கைதான 21 ,25 ,36 , 48 ,34 , சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய கொள்ளையடித்து செல்லப்பட்ட சுமார் 1 கோடியே 50 இலட்சம் பெறுமதியான மோட்டார் உட்பட உபகரணங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் கைதான சந்தேக நபர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையானதுடன் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் யாவும் நீதிமன்ற நடவடிக்கைக்காக எடுத்து பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே வேளை கடந்த ஆண்டு அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள நீதவான் ஒருவரின் வீடு உட்பட பல வீடுகளில் கொள்ளையிட்டு வந்த கொள்ளையர்கள் காரைதீவு வெட்டுவாய்க்கால் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் அவர்களை மடக்கிபிடிக்க முற்பட்ட போது பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோக முயற்சி தொடர்பில் கைதான தேரர்கள் உள்ளிட்ட சந்தேக நபர்களை விரைவாக கைது செய்வதற்கு குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பரிசோதகர் ஏ.எல்.எம். அஸீம் தலைமையிலான குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டு மக்களின் பாராட்டை பெற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# முன்னாள் எம்.பி.யின் சிலை திறப்பு



**(பொன்ஆனந்தம் )**

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களது 25வது ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலை திறப்புவிழாவும், நினைவு மலர் வெளியீடும் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தி/மூ/கிளிவெட்டி மகாவித்தியாலய தங்கத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தந்தை செல்வா என போற்றப்படுகின்ற சாமுவேல் செல்வநாயகம் அவர்களின் மைந்தனும், சட்டத்தரணியுமான சந்திரகாசன் உட்பட அரசியல் பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூதூர் - கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து 34 வயது இளைஞனாக இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவான அமரர் தங்கத்துரை 1970ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தடவைகளும் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். தனது அரசியல் காலத்தில் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்து மூவின மக்களினுடைய ஆதரவினையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# பந்து தடுப்புச் சீலைக்கு தீ வைப்பு

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாழைச்சேனை பகுதியில் இயங்கி வரும் அஸ்பக் அகடமியின் விளையாட்டு மைதான சுற்றுமதில் மேல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பந்து தடுப்பு கடின சீலைக்கு நேற்று முன்தினம் (21) காலை இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விளையாட்டு மைதானத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது பந்து சுற்று மதிலை தாண்டி வெளியில் செல்லாமல் தடுப்பதற்காக வேண்டி கடின சீலை பொருத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு பொருத்தப்பட்டிருந்த சீலைக்கு தீ வைக்கப்பட்டு அது முற்றாக எரிந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தைபா அரபுக் கல்லூரியில் 07 மாணவிகளுக்கு மௌலவியா பட்டம்



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**



சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இம்முறை 07 மாணவிகள், மௌலவியா பட்டம் பெற்று வெளியேறுகின்றனர் என கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இக்கல்லூரியில் ஐந்து வருட கால அல்-ஆலிம் எனும் இஸ்லாமிய மார்க்க கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்து, இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள ஐந்தாவது தொகுதி மாணவிகளான இவர்களுக்குரிய பட்டமளிப்பு விழா விரைவில் இடம்பெறவுள்ளது.

ஏ.டபிள்யூ.எப்.அப்னா ஹனூன் (சாய்ந்தமருது), ஏ.ஜி.எப்.ஸஹ்றா (சாய்ந்தமருது), ஏ.ஆர்.எப்.சனோபர் ஹஸீன் (சாய்ந்தமருது), ஜே.எப்.றிழா (சவளக்கடை), ஏ.எம்.எப்.சபானா (சாய்ந்தமருது), எம்.யூ.எப்.முப்லிஹா (சாய்ந்தமருது), ஏ.எம்.எப்.றிப்கானா (சவளக்கடை) ஆகியோரே 'தைபியா' எனும் பட்டத்துடன் மௌலவியாக்களாக வெளியேறுகின்றனர்.

இதற்கு முன்னர் கடந்த நான்கு தொகுதி மாணவிகளில் 23 பேர் அடங்கலாக இதுவரை 30 பேர் இக்கல்லூரியில் இருந்து மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

இவர்களுள் 15 பேர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற இக்கல்லூரியில் மௌலவியா பட்டத்திற்கான அல்ஆலிம் இஸ்லாமிய கற்கை நெறி போதிக்கப்படுவதுடன் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கும் குறித்த மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர்- என்று அதிபர் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி மேலும் தெரிவித்தார்.

# 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு



**(பேரின்பராஜா சபேஷ்)**

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் நிதியுதவியினால் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி - இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றிற்கு சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்றது.

சித்தாண்டி - இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபைனரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை சிறிதேவி குடும்பத்திற்கு வீடு அமைக்கப்படவுள்ளது.

லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன், பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வீடு கட்டுவதற்கான அடிக்கலிலினை நட்டுவைத்தனர்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் நோயினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நான்கு பிள்ளைகளுடன் பாதுகாப்பற்ற குடிசை வீட்டில் வாழ்ந்துவந்த குறித்த குடும்பம் தொடர்பாக லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபைக்கு முன்வைத்த கோரிக்கை;கக அமைவாக குறித்த வீடு கட்டுவதற்காக நிதி வழங்கப்ப்பட்டுள்ளது.

இலுக்குப் பொத்தானை கிரமத்தில் குடிநீர் பிரச்சினை இருப்பதாக கிராம மக்கள் முன்வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் இரண்டு பொதுக் கிணறுகளை அமைப்பதற்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

# திருக்கோவிலில் பாரிய கடல் அரிப்பு






( காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் பிரதேசத்தில் பாரிய கடல் அரிப்பு இடம்பெற்று வருகிறது.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதி மற்றும் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடல் பகுதிகள் இந்த கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றது.

கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்று வரும் இந்த கடல் அரிப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. அது போல ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டிருக்கிறது சுமார் 100 அடி பரப்பு கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது .

மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. அவர்களது மீன்பிடி வள்ளங்கள் கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

# ஹரீஸ் எம்.பியின் அதிரடி முயற்சியினால் மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை !

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 08 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தினமும் தலா 01 வவுசர் எரிபொருளை வழங்கி மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானமானது அம்பாறை மாவட்ட மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினையை தீர்த்துவைக்கும் முகமாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஜனாதிபதிக்கு முன்வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் ஜனாதிபதி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு முன்வைத்த பணிப்புரைக்கு அமைய இன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.



அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகள் உரிமையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.ஏ. நஸீர் உட்பட அம்பாறை மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மீனவர்கள் மற்றும் பெரும்போக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதனால் பல ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட விடயங்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் எரிபொருள் தேவைகள், ஏனைய பிரதேசங்களில் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கிடைக்கும் சலுகைகள் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிடைக்காமை தொடர்பிலும், சில மீன்பிடித்துறைமுகங்களிடமிருந்து அப்பிரதேச ஒவ்வொரு மீன்பிடி படகுக்கும் கிடைக்கும் 50 லீட்டர் டீசல் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு கிடைப்பதில்லை என்ற விடயங்களையும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் இதன்போது விளக்கினார்.

மீனவர்களுக்கு தேவையான டீசல் மற்றும் மண்ணெண்ணெய் தேவைகள் தொடர்பிலான விடயங்களையும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களை கேட்டறிந்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இப்பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் வகையில் ஒலுவில் துறைமுக எரிபொருள் நிரப்பு நிலையம் செயற்பாட்டுக்கு வரும் வரை அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 08 நிலையங்களுக்கும் மீனவர்களின் நன்மை கருதி தலா ஒரு வவுசர் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் எம்.யூ.உவைஸ் உட்பட கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். எதிர்வரும் புதன்கிழமை முதல் இந்த செயற்பாடு நடைமுறைக்கு வரவுள்ளதுடன் பெரும்போக விவசாயத்தின் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள கிழக்கு விவசாயிகளின் விவசாய தேவைகளுக்கான எரிபொருளையும் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகள் அமைச்சரினால் பணிக்கப்பட்டுள்ளனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தோர்கள் துரிதகெதியில் நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கும், அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் நன்றிகளை தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு மாவட்ட சுகாதார மீளாய்வு கலந்துரையாடல்!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார மீளாய்வு கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.ஆர்.எம்.தௌபிக் மற்றும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கோஸ்டா அவர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இதன்போது பிரதி பிராந்திய பணிப்பாளர் வைத்தியகலாநிதி நாகலிங்கம் மயூரன், பிராந்திய பணிமனையின் பிராந்திய தலைவர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பிராந்தியத்தின் முக்கியமான சுகாதார அதிகாரிகள் என பலரும் குறித்த கலந்துரையாடலில் பங்குகொண்டுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின் போது மாவட்டத்தின் தற்போதைய சுகாதார நிலமை, மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள், மருந்து பொருட்களின் கையிருப்பு, கர்ப்பிணித் தாய்மார் பராமரிப்பு, சிறுவர்கள், மாணவர்கள் நிலமை, போதைப் பொருள் பாவனைகளை கட்டுப்படுத்தல், டெங்கு, கொவிட்-19 நிலமை, பற்சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, தரமுகாமைத்துவம், தொற்றாநோய்கள், நிருவாகம், நிதிநிலமை, பாலியல்நோய், திட்டமிடல் என பல்வேறு விடையங்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அடுத்த வாரத்துடன் கொழும்பு தேசிய கண் வைத்திய சாலையின் பணிப்பாளராக இடம் மாற்றம் பெற்று செல்லும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.ஆர்.எம்.தௌபிக் அவர்களின் சேவையை கௌரவித்து பாராட்டப்பட்டதுடன், புதிய மாகாணப் பளிப்பாளராக பதவியேற்கவுள்ள வைத்தியகலாநிதி கோஸ்டா அவர்களைய வரவேற்று கௌரவமளிக்கப்பட்டுள்ளது.




# பச்சை நிறமாக மாறி வருகிறது மட்டக்களப்பு வாவி




(ரக்ஸனா)

தற்போது மட்டக்களப்பு வாவியின் பெரும்பாலான நீர்ப்பரப்பு பூங்கறை எனும் ஒருவித பச்சைப் படையால் சூழப்பட்டுள்ளதால் மட்டக்களப்பைச் சூழ அமைந்துள்ள மட்டக்களப்பு நெடு வாவி மாசடைந்து கொண்டு வருகின்றது.

இதன் காரணமாக சில இடங்களில் துர்நாற்றமும் வீசுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாவியில் வலைவீசி மீன் பிடிக்க முடியாமலுள்ளதாகவும் இந்தப் பூங்கறையில் ஒரு வித பசைத் தன்மை உள்ளதால் அதில் வலைகள் ஒட்டிக் கொள்வதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

வருடாவருடம் இத்தகைய பூங்கறை எனும் பச்சை படர்தல் வாவியின் மேற்பரப்பில் சில நாட்களுக்குப் படர்ந்து பின்னர் இயற்கையாகவே மறைந்து விடுவதாகவும் ஆனால் இந்த வருடம் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இந்தப் பூங்கறைப் பச்சைப் படலம் வாவியின் மேல் படரத்துவங்கி இன்னமும் அது மறையவில்லை என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்ந்து நீடிக்குமானால் இயற்கைக்கும் நீர் வாழ் உயிரினங்களுக்கும் அன் விளைவாக மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் மீனவர்கள் அச்சப்படுகின்றனர்.

இது தொடர்பாக கிழக்குப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியரும் நீர் வாழ் உயிரின ஆய்வாளருமான கலாநிதி பெரியதம்பி வினோபபாவிடம் கேட்டபோது, இது இயல்பாகவே நடக்கும் நிகழ்வு என்றாலும் பயிர்ச் செய்கைக்கு இடப்படும் இரசாயன உரக்கலவைகளில் பொதிந்துள்ள நைற்ரோஜன் பொஸ்பேற் நீர் நிலைகளை அடையும்போது இத்தகைய பச்சைப் படலம் உருவாகிறது.

இம்முறை முதல் அரையாண்டில் குறிப்பாக மார்ச் மாதமளவில் பெய்ய வேண்டிய மழை கிடைக்காததால் இந்தப் பூங்கறை அப்படியே வாவியில் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. அத்தோடு வாவி நீர் கடலில் கலக்க முடியாத வண்ணம் முகத்துவாரம் எனும் கடல் - வாவி முகவாய் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த பச்சைப் படலம் வாவியின் மேற்பரப்பில் பல இடங்களில் பரவியுள்ளது.

தற்போதைக்கு இது நீர்வாழ் உயிரினங்களுக்கும் அதனை உண்ணும் மணிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பாதிப்புக்களைத் தரவில்லை என்றாலும் எதிர்காலத்தில் பாதிப்புக்கள் வராது என்று சொல்வதற்கில்லை.

விவசாயிகள் தேவைக்கு அதிகமாக இரசாயன உரத்தைப் பாவித்து அவை பயிர்களால் உறுஞ்சப்பட்டது போக மீதமானவை வாவியில் கலக்கின்றன. அதனாலும் வாவியில் கொட்டப்படும் கழிவுகளாலும் இத்தகைய சூழல் மாசடைதல் ஏற்படுகிறது என்றார்.

# கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்தின் நினைவாக மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள் வழங்கி வைப்பு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவும் திட்டமொன்று இன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் கடந்த 1998 சாதாரணதர மற்றும் 2001 உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்ற சிவானந்தியன்கள் ஒன்றிணைந்து குறித்த கல்விக்கான சமூகப்பணியினை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயத்தில் (20) திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் மட்/ மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயத்தின் 50 மாணவர்களும், மட் / மஞ்சந்தொடுவாய் சாரதா வித்தியாலயத்தின் 52 மாணவர்களும் இதன்போது பயன்பெற்றிருந்தனர்.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் எந்திரி ர.வள்ளுவன் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான உதவிகளை வழங்கியிருந்தார்.

அவுஸ்திரேலியாவில் வசித்து வருபவர்களான செ.தயானந்தன், சே.லோகேந்திராஜா மற்றும் சு.சுபகாந் ஆகியோரது நிதி அனுசரனையில் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இளம் வயதில் கிழக்கு மாகாண பணிப்பாளராக பதவியேற்ற சரண்யா சுதர்சன்



திருகோணமலை மாவட்ட - தம்பலகமம் பிரதேசத்தைபிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை அரியநாயகம் மற்றும் பத்மலோஜினி அரியநாயகம் ஆகியோருக்கு 02 வது பிள்ளையாகப் பிறந்த அரியநாயகம் சரண்யா, திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை கற்ற இவர், உயர்தரப் பரீட்சையில் மாவட்டத்தில் 16வது நிலையைப் பெற்ற மாணவியாகத் தெரிவாகி இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவானார்.

தனது 4 வருட பல்கலைக்கழக காலப்பகுதியில் பல சவால்களை எதிர்கொண்டு வியாபார நிருவாகமாணிப் பட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் சிறப்பு பட்டங்களைப் பெற்று முதல் நிலை மாணவியாகத் திகழ்ந்த இவருக்கு, சிறந்த மாணருக்கான விருது மற்றும் அனைத்து வருடங்களின் மிகச் சிறந்த மாணவர் விருதினையும் தனதாக்கிக் கொண்ட பெருமையும் இவருக்குண்டு.

அவரது கல்விப் பருவத்தில் கற்றல் செயற்பாடுகளில் மட்டும் நின்றுவிடாமல் விளையாட்டு நிகழ்ச்சிகள், கலை கலாசார நிகழ்ச்சிகள், தொழிநுட்ப அறிவுப் போட்டிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற ஒரு முன்னணி மாணவியாகவும் திகழ்ந்துள்ளார்.

இலங்கை நிருவாக சேவை அல்லது கணக்காளர் சேவையில் தனது மகள் உள்நுழையவேண்டுமென, தனது தந்தையின் கனவாக இருந்தது. அவரின் கனவே தனது கனவாக நினைத்துக் கொண்டு அந்த இலக்கை முன்வைத்து அவரது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்தார். அந்த இலக்கையும் அடைந்தார்.

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பதவியில் பயிலுநராக இருந்தபோது, பட்டபின் படிப்பு பொது நிருவாகப் பரீட்சையில் மிகச் சிறந்த தேர்ச்சி சித்தி பெற்றதனால், அவருக்கு தங்க விருது கிடைக்கப்பெற்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அதற்கமைவாக, அரியநாயகம் சரண்யா 2014 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்ட இவர், அதே யாண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை வங்கியில் கடமையாற்றி வந்தார். 2015 ஆம் ஆண்டு இலங்கை அவிருத்தி நிருவாக நிறுவனத்தில் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பயிலுனராக இணைக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டு, 7 வருடங்கள் கடமையாற்றி வந்த இந்நிலைமையில், 2022 ஆம் ஆண்டு சிறிது காலப்பகுதியில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

அவர் கடமையாற்றிய காலப்பகுதியில் திணைக்களத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ததுடன், அதன் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்து பல்வேறுபட்ட அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்கு பாரிய பங்களிப்பைச் செய்துவந்தார்.

இந்நிலைமையிலேயே, கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொறியியலாளர் இராஜயோகம் சுதர்ஸன் என்பவரை 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்து 1 ஆண் மற்றும் 1 பெண் பிள்ளைக்கு தாயாகவும், சிறந்த குடும்பத் தலைவியாகவும் இருந்து வருகிறார்.

**பைஷல் இஸ்மாயில்**





# நீர்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை 401 கிலோ மீட்டர் தூரத்தை சைக்கிளிங் ஓடி விழிப்புணர்வை ஏற்படுத்திய துரைசிங்கம் கோபிநாத்




நீர்கொழும்பில் இருந்து புத்தளம் - அனுராதபுரம் ஊடாக யாழ்ப்பாணம் வரையான 401 கிலோமீட்டர் தூரத்தை 22 மணித்தியால மொத்த நேரத்தில் இயங்கு நேரமாக 14 மணி 45 நிமிடங்களில் பயணித்து யாழ்ப்பாணத்தை அடைந்து (16) சைக்கிளிங் ஓடுபவர்களுக்கு விழிப்புணர்வையும் முன்மாதிரியையும் ஏற்படுத்திய து.கோபிநாத்திற்கு சைக்கிளிங் கழகங்கள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

துரைசிங்கம் கோபிநாத் யாழ்ப்பாணத்தின், காங்கேசன்துறை, தையிட்டி எனும் கிராமத்தில் பிறந்து தனது ஆரம்ப கல்வியை யா/ நடேஸ்வரா கல்லூரி - காங்கேசன்துறை மற்றும் யா/ சிவப்பிரகாச மகா வித்தியாலயம் - சங்கானை மேலும் யா/ தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் நிறைவு செய்தவர் தற்போது தனியார் நிறுவனம் ஒன்றில் பிராந்திய முகாமையாளராக கடமை புரிந்து கொண்டிருக்கின்றார்.

திரு. கோபிநாத் அவர்கள் எப்பொழுதும் விளையாட்டின் மீது அதீத ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். பாடசாலைக் காலங்களின் போதும் அதன் பின்னரான காலங்களில் கூட பேட்மின்டன், நீச்சல், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை தனது உடற்பயிற்சிக்காகவும், போட்டிகளுக்காகவும் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தார். தனது காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக பேட்மிண்டன் விளையாட்டை கைவிட வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டதன் பின்னர் பேட்மின்டன் விளையாடுவதிலும் காலில் ஏற்பட்ட உபாதை பெரும் சிரமங்களை அவருக்கு உண்டுபண்ணிய போதிலும் கரப்பந்தாட்டத்தில் தனது ஆர்வத்தை முழுமையாக செலுத்தி வந்தார்.

ஒரு கட்டத்தில் முழுமையாக உடற்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த நேரங்கள் குறைவடைந்த நிலையில் உடற்பருமன் அதிகரித்து தனது உடல் நிறை 96 கிலோ கிராம் ஆக அஅதிகரித்ததை உணர்ந்தவர் உடற்பயிற்சிக்காக ஏதாவது ஒரு விளையாட்டை தினமும் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் சைக்கிளிங்கை தனது பயிற்சிக்கான விளையாட்டாக தேர்வு செய்தார்.

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சாதாரண பாவனையிலுள்ள ஒரு துவிச்சக்கர வண்டியை தனது பயிற்சிக்காக சில மாற்றங்களோடு தேர்வு செய்து தினமும் மிதிவண்டியில் தனது பயிற்சியை தொடர்ந்தார். அதே ஆண்டின் டிசம்பர் மாதத்தில் உலகையே திருப்பிப்போட்ட கொரோணாத் தாக்கத்தின் காரணமாக முழு நாடும் முடக்கப்பட்டு வீட்டிலேயே முடங்கி இருந்த நிலையில் தனது உடற்பருமன் மேலும் அதிகரித்திருப்பதை உணர்ந்து இதன் பின்னரான காலங்களில் தினமும் சைக்கிள் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட ஆரம்பித்தார்.

சைக்கிளோட்டத்தின் போது தன்னில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களை அவதானித்தவர் அதன் மீது தீராத காதல் கொண்டார். திரு. கோபிநாத் அவர்கள் தனது தேடல் காரணமாகவும் நண்பர்கள் மூலமாக கிடைத்த அறிவுரைகளின் மூலம் சைக்கிளிங் பயிற்சியின் அடுத்த தளத்திற்கு தன்னை நகர்த்தினார்.

மிதிவண்டிப் பயிற்சிக்காக மட்டுமல்லாது தேசிய ரீதியான போட்டிகளிலும் பங்கு பற்றுவதற்காக தன்னை தயார்படுத்த ஆரம்பித்தார். அதற்காக சாதாரண மிதிவண்டியில் இருந்து வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பாவனையிலுள்ளதுவும் போட்டிகளில் பொதுவாகப் பயன்படுத்தக்கூடியதுமான றோட் பைக் (Road Bike) என்று அழைக்கப்படக்கூடிய மிகவும் பாரம் குறைந்த கார்பனிலான சைக்கிளை தனது பயிற்சிக்கும் போட்டிகளுக்காக தெரிவு செய்தார்.

வடகிழக்கை மையமாக கொண்டு இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தின் (Riders Hub Cycling Club) வடக்குக்கான செயற்பாட்டாளர்களான இருவரில் வைத்தியர். க. காண்டீபன் (என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர்) அவர்களுடன் ஒருவராக இயங்கி வருகின்றார். இதன் மூலம் வட கிழக்கில் விழிப்புணர்வு செயற்பாடுகள் மூலமாக மிதிவண்டியின் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் அதன் பயன்கள் போன்றவற்றை தமிழ் பேசும் சமூகத்தின் இடையே ஊக்கப்படுத்தியும் வருகின்றார்கள்.

இதுவரை சுமார் 15 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தை சைக்கிள் பயணத் தூரமாக எட்டியுள்ள திரு. கோபிநாத் அவர்கள் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற றேஸ் த பேர்ல் (Race the pearl) எனும் சைக்கிள் அஞ்சலோட்டப் போட்டியில் தனது கழகம் சார்பாக கலந்து பருத்தித்துறை முதல் வவுனியா வரையான தூரத்தை ஐவரில் முதலாமவராக (சுமார் 145டுட் தூரத்தை) அஞ்சல் குழுவிற்காக ஓடினார். இப்போட்டியானது இலங்கையில் மிகவும் நீளமான 614 ஒட் தூரத்தை உடைய போட்டியாகும், இது பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திரமுனை வரையானது, இதனை 24 மணித்தியாலத்திற்குள் கடந்துவிட வேண்டும் இதில் இவர்களது கழகம் பங்கேற்ற முதற்தடவையே ஐந்தாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

இலங்கையின் முதலாவது மருத்துவ கல்லூரியான மானிப்பாய் கிரீன் மெமோரியல் வைத்தியசாலையின் புனருத்தாரண வேலைகளுக்காக நிதி திரட்டும் சைக்கிள் ஓட்டம் கடந்த 2022 பெப்ரவரி மாதம் நடைபெற்ற றைட் போர் சிலோன் (Ride for Ceylon) இல் கலந்து கொண்டார். இந்த சைக்கிளோட்டம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை திருகோணமலை - வவுனியாக ஊடாக 04 நாட்கள் கொண்ட பயணமாக அமைந்திருந்தது. இதில் சைக்கிளோட்டியாக கலந்து தனது பங்களிப்பைச் செய்திருந்தார்.

கடந்த மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ⁇ யாழ் ஆரோக்கிய நகரம் ⁇என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற சைக்கிள் ஓட்ட விழிப்புணர்வு பேரணியிலும் கலந்து கொண்டார்.

தனது உடல் எடையை குறைப்பதற்கான ஆரோக்கியத்தை நோக்கி ஆரம்பித்த சைக்கிளிங் பயணம் இன்று அவரை தேசிய ரீதியிலான சைக்கிள் ஓட்டிகளிடையே அவரது அடையாளமாக மாமாறியுள்ளது. இந்த பயணத்தை ஆரம்பிக்கும் போது அவரது உடல் எடை 96 ஒஞ் இலிருந்தது இன்று 74 ஒஞ் ஆக குறைந்துள்ளமை இவரது உழைப்பிற்கு கிடைத்த வெற்றியும் அங்கீகாரமுமாகும்.

சைக்கிள் ஓட்ட பயிற்சியானது சகல வயதினருக்கும் உகந்த ஒரு பயிற்சியாகும். இப்பயிற்சியானது தொற்றா நோய்களான சர்க்கரை நோய், இதய நோய்கள்,

குருதியில் கொழுப்பின் அளவு அதிகமாக காணப்படுதல், உயர் குருதி அழுத்தம், மூட்டுவருத்தங்கள் மற்றும் சிலவகை புற்றுநோய்களில் இருந்தும் எம்மை பாதுகாக்கின்றது என்பதோடு எமது சிறு தூர வேலைகளுக்கான தேவைகளை சைக்கிளில் பயணிப்பதால் எமது சூழலில் கரியமில வாயுவின் தாக்கத்தை குறைத்து பசுமையை ஏற்படுத்த நாம் காரணியாவோம் என்பதே சைக்கிள் ஓட்டத்தின் மூலம் இவர் சார்ந்த சைக்கிளிங் சமூகம் எமக்கு சொல்லும் செய்தியாகும்.

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

# மாணவர்கள் விலகிச் செல்கின்றார்கள்

## மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா





(ரக்ஸனா)

சிறுகதை எழுத்தாளர் பரமேஸ்வரி இளங்கோவன் எழுதிய பொய்யெல்லாம் மெய்யென்று நூல் வெளியீட்டு விழா ஏறாவூர் ஸ்ரீ கணேச காளிகா மணி மண்டபத்தில் திங்கள்கிழமை 22.08.2022 கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே. சித்திரவேல் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, இன்னும் கல்வித்துறை சார்ந்த பல அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், உட்பட எழுத்துத் துறை சார்ந்த ஆர்வலர்களும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

நூல் நயவுரையை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபரும் எழுத்தாளரும் கவிஞருமான சுதாகரி மணிவண்ணன் நிகழ்த்தினார். நிகழ்ச்சித் தொகுப்பை மட்டக்களப்பு ஆசிரியர் மத்திய நிலைய விரிவுரையாளர் சுதாகினி டெஸ்மன் றாகல் வழங்கினார்.

நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா, சமகாலத்தில் இளம் சமுதாயத்தினரை குறிப்பாக மாணவர்களை வாசித்தல் தேடலின் பால் நகர்த்துவதற்கு ஆசிரியர்களும் அதிபர்களும் கடும முயற்சி எடுக்கின்றார்கள்.

ஆனால் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்களின் கைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிக் கொண்டே போகின்றார்கள்.

மகிவும் கவலையாக இருக்கின்றது. இந்த தொடர்பாடல் தொழினுட்ப யுகத்தி-ல் இருந்து மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்களா என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி நூல்கள் ஒரு பொக்கிஷம் போன்றவை. ஆனால், வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களை மீளவும் ஒப்படைக்குமாறு கேட்கப்படும் பொழுது அந்த புத்தகங்கங்கள் திறந்து பார்க்ப்படாமல் புத்தம் புதிதாகவே மாணவர்களால் திரும்ப ஒப்படைக்கப்படுவதை அவதானிக்கின்றோம்.

இது மாணவர்கள் இந்த புத்தகங்களைத் திறந்து கூடப் பார்க்கவில்லையா என்கின்ற கேள்வியை எழச் செய்கின்றது. இது கவலைக்குரியது. வாசிப்புப் பழக்கம் என்பது கிட்டத்தட்ட இல்லை என்ற நிலையிலேயே மாணவர்கள் உள்ளார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். மாற்ற வேண்டும். என்றார்.

# 'தேனகபோசா' உத்தியோகபூர்வமாக மட்டக்களப்பில் அறிமுகம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான், ஏறாவூர் நிருபர்-நாஸர்)

மட்டக்களப்பு மாவடிவேம்பு பகுதியில் உள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் சத்துமா வழங்கும் திட்டம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் பங்குபற்றலுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகள் உள்ளிட்டோரிற்கு இதன்போது சத்துமா வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்கால சிறார்களின் சிறப்பான புத்திக் கூர்மையையும் சிறந்த கல்வி அடைவு மட்டத்தையும் எதிர்பார்த்தே குறித்த போசாக்கு திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் இதன் போது தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை அதிகளவில் கொண்டிருப்பதனால் போசாக்கு குறைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படுகிறது.

சமூக பொருளாதாதார காரணங்கள், கல்வியறிவு நிலை என பல காரணங்களை வென்று போசாக்கான சமூகமாக மாற வேண்டிய தேவையை உணந்துள்ளதுடன், கடந்த ஒரு வருடகாலமாக இலங்கையில் ஏற்பட்ட திடீர் பொருளாதார சீர்குலைவு காரணமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் நிறை குறைந்த சிறுவர்களுக்கும் அரசினால் வழங்கப்பட்டுவந்த திரிப்போசா உணவை கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நிறுத்தியதை தொடர்ந்து மட்டக்களப்பில் உள்ள சுகாதார வைத்தியதிகாரிகள் பிரிவில் உள்ள கிளினிக்குகளில் மாதாந்தம் எடுக்கப்படும் சுட்டிகளில் பாரிய பாதிப்பை காட்டத்தொடங்கியதுடன் மந்தபோசனை இரண்டு மடங்கை நோக்கி உயரத் தொடங்கியதுடன்,

கர்ப்பணியாக இருக்கும் போதும் சிறுவர்கள் ஐந்து வயது வரையுந்தான் குழந்தை முதல் சிறுவர்களின் மூளை வளர்ச்சி 95% இருக்கும். போசாக்கு குறைவு அவர்களின் ஒட்டுமொத்த புத்திக் கூர்மையையும் அழித்துவிடும்.

இப்படியே விட்டால் எமது ஒரு பரம்பரையே பாதிக்கப்பட்டுவிடுமென சிந்தித்ததன் விளைவில் உருவானதுதான் இந்த ''தேனகபோசா'' திட்டம் என்றால் அது மிகையாகாது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித்தாய் மாருக்கும் போசனை குறைந்த சிறார்களுக்கும் வழங்குவதற்கான திட்டத்தினை மட்டக்களப்பு பிராந்திய சுதாதார பணிமனை முன்னெடுக்க திட்டமிட்டு செயற்பட்டு வருவதுடன், வாகரை தொடக்கம் களுவாஞ்சிகுடி, வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி என ஒட்டுமொத்த மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களுக்கும் வழங்க முயற்சித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதென தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் வைத்தியகலாநிதி கடம்பநாதன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் உயரதிகாரிகள், வைத்தியர்கள் மற்றும் மேலும் பல சுகாதார சேவைகள் உத்தியாகத்தர்கள் என மேலும் பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச அலுவலர்களுக்கான அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றிவரும் அரச அலுவலர்களுக்கான அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முழுநாள் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை கல்லடி கிரீன் காடன் தனியார் விடுதியில்





இடம்பெற்றது.

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையினால் நாடாத்தப்பட்ட இந்நிகழ்வு சர்வமத பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் என்.பாசுதேவன், சர்வமத பேரவையின் மாவட்ட உதவி இணைப்பாளர் எச்.ஏ.எம். ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், நிகழ்விற்கு வளவாளராக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீடத்திற்கான சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ரமேஷ் இராமசாமி கலந்து கொண்டு அரசியல் யாப்பு (19 - 22) திருத்தம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கமளித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாவட்ட செயலகம் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு அரசியல் யாப்பு திருத்தத்தின் அவசியம் அதன் முக்கியத்துவம் மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பாகவும் விரிவாக தெளிவூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பஞ்சத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் மரக்கன்றுகள் மரக்கறிப் பயிர் விதைகள் விநியோகம்

(ரக்ஸனா)

எதிர்வு கூறப்படும் உணவுப் பஞ்சத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வீட்டுத் தோட்ட விவசாயிகளுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு மரக்கறிப் பயிர் நாற்றுக்களும் பழ மரக்கன்றுகளும் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போதனாசிரியை எம்.எச். முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.



ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல் மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி மற்றும் மிளகாய் நாற்றுக்களை வழங்கும் நிகழ்வு ஏறாவூர் நகரில் திங்கள்கிழமை 22.08.2022 இடம்பெற்றது.

அங்கு நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விவசாயப் போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன், போதியளவு நிலப்பரப்புக் குறைவாக இருக்கின்ற இடங்களிலும் கூட பயிர்களை நாட்டி நாளாந்த வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை இலைக்கறிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் நமக்குத் தேவையான போஷணைடியும் பெற்றுக் கொண்டு நோய் நொடியற்று ஆரோக்கியமாக வாழ முடியும். பயிர்களுக்குத் தேவையான இயற்கைப் பசளைகளையும் நாமே வீட்டில் நாளாந்தம் சேரும் கழிவுகளைக் கொண்டு தயாரித்துக் கொள்ள முடியும்.

நகர பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தை சிறப்பாகச் செய்து அறுவடையை நிரூபித்தக் காட்டி வெற்றியடைந்த விவசாயிகளும் ஏறாவூர் நகர பிரதேசத்தில் உள்ளார்கள்.

எனவே இத்தகைய முன்மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு பெண்களும் உணவு உற்பத்திக்காக நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாமே உற்பத்தி செய்து தன்னிறைவு அடைய வேண்டும்; என்றார்.

இந்நிகழ்வில் மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹபீப் முஹம்மது பாத்திமாசர்மிலா உட்பட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும்; பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பயங்கரவாத தடை சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

"கடந்த 30 வருட யுத்தத்தின் போது, யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரமன்றி, அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலரும் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளுமின்றி அநியாயமாக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

அதே போன்று, ஈஸ்டர் தாக்குதலின் பிற்பாடு, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள் என முஸ்லிம்களை குறிவைத்து இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது.

தற்போது, நாட்டினை நாசமாக்கிய ஆட்சியாளருக்கு எதிராக போராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்ட போது, ஏனைய சமூகத்தவர்கள் அதற்கு எதிராக போதுமான அளவில் கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, பெரும்பான்மை சமூகத்தவர்கள் போதுமான



அளவில் அதற்கெதிராக கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை. ஆனால், இன்று இந்நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல், பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டதை விடவும் அரசியல் உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம் என்பது எல்லோருமே அறிந்த விடயம்.

நான் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இன்றைய ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள், எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக பாராளுமன்றத்திலே மிகவும் காத்திரமாக குரல் கொடுத்த ஒருவர் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அதேசமயம், அவ்வாறான ஒருவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில், அறவழிப் போராட்டக்காரர்களை அவரது கையொப்பத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எண்ணி மிகவும் வேதனையடைகின்றேன்.

இவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பிரயோகிக்கின்ற பொழுது, தற்பொழுது நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான பொருளாதார நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை அச்சத்தோடு நினைவுகூற விரும்புகின்றேன்.

பயங்கரவாத தடைச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, இச்சட்டம் பயங்கரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டதை விட அரசியல் தேவைகளுக்காகவே அதிகமாக பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இப்பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டின் சட்டங்களிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அது மாத்திரமின்றி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# மருதமுனை முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு அடையாள அட்டை வழங்குதலும் ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வு





(றாசிக் நபாயிஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வப்ரா முச்சக்கரவண்டி சாரதிகள் கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுச்சங்கத்தை சேர்ந்த சாரதிகளுக்கு சங்க அடையாள அட்டை வழங்குதலும் முச்சக்கர வண்டிகளுக்கு அடையாள ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வும் மருதமுனை அல்-மதீனா வித்தியாலையத்தில் (20) சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம்.றாஸிக் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியகத்அலி, சிறப்பதிதியாக மருதமுனை மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜீ.துஸாரா திலங்க, கௌரவ அதிதிகளாக சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வாளர் பி.ரி. ஆதம் பாவா, சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி.எம்.அஷ்ரப், சங்கத்தின் சட்ட ஆலோசகர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.ரய்சூல் ஹாதி, மருதமுனை மனால் ஜுவலரியின் உரிமையாளர் எஸ்.எச்.அபூல் கலாம், வப்ரா முச்சக்கரவண்டி சாரதிகள் கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுச்சங்க அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம் றாஸிக், செயலாளர் ஜே.எம்.ஹபீல், பொருளாளர் வை.எல்.எம்.பாறுக் மற்றும் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அதிதிகளால் சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை மற்றும் அவர்களின் முச்சக்கர வண்டிகளுக்கு அடையாள ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

# கோடியேற்றத்துடன் ஆரம்பமான பாலையடி வால விக்னேஸ்வரரின் மஹோற்சவ பெருவிழா





( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பாலையடி வாலவிக்கினேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவானது நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நேற்று (22) திங்கட்கிழமை காலை மாவடி கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து கொடிச்சீலை கொண்டு வரப்பட்டு 12.15 மணியளவில் கொடியேற்றம் இடம் பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறுகிறது.

இப் பெருவிழா தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா இடம்பெற்று செப்டம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிறைவு பெறும்.

எதிர்வரும் 31ஆம் தேதி கண்ணகி அம்பாள் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம் பெறும். கும்பாபிஷேகத்தின் பின் சுமுகமான நிலையில் இடம் பெறும் திருவிழா என்பதால் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்துள்ளதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் அ.குமரநாதன்( ஆசிரியர்) தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க அண்மையில் இவ் ஆலயத் தலைவர் இ.தங்கராசா( ஓய்வு நிலை அதிபர்) இறைபதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதார தொழில் இழந்து ஜீவனோபாயத்திற்கே வழியின்றி வாழ்ந்து வருகின்றோம்



(பழுகாமம் நிருபர்)

நாட்டில் நிலவி வரும் மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக சுமார் இரண்டரை மாதங்கள் எங்களது வாழ்வாதார தொழில் இழந்து ஜீவனோபாயத்திற்கே வழியின்றி வாழ்ந்து வருவதாகத கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கோட்டைக்கல்லாறு கடற்றொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கையில்.

எமது கடற்கரையை பொறுத்தளவில் சுமர் முப்பதற்கு மேற்பட்ட மீன்பிடி படகுகள் இருக்கின்றன. இதனை நம்பி நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் இவ் மீன் பிடியை வைத்தே நாங்க எங்களது குடும்பத்தின் ஜீவனோபாயத்தை நடாத்தி வருகின்றனர். இந் நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதர பிரச்சினை காரணமாக என்றும் இல்லாதவாறு அனைத்து பொருட்களின் விலை உயர்வடைத்துள்ளது. இந் நிலையில் மண்ணெண்ணை இல்லா பிரச்சினை எமது தொழிலை முற்றாக பாதிப்படைய செய்துள்ளது. இதனால் நாங்கள் குடும்பரீதிய பலத்த பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

இது மாத்திரமின்றி குறித்த கடற்கரையை நம்பி மீன் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்;

இக் கடற்கரை மீன் பிடியை நம்பி ஐம்பதிற்கு மேற்பட்ட மீன் வியாபாரிகள் தொழிலினை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நாங்கள் வழமையாக ஐந்நூறு கிலோவுக்கும் மேற்பட்ட மீன்களை பிடிப்போம் அவர்கள் அனைவரும் தொழிலினை சிறப்பாக மேற்கொண்டு வந்தனர். மாறாக தற்போது தோணி மூலம் சிறிதளவு மீன்களே பிடிக்கப்படுகின்றது இதனூடாக ஓரிரு வியாபாரிகளுக்கே தொழில் கிடைக்கின்றது. மற்றவர்கள் தொழிலின்றி திரும்பி வீடு செல்கின்றனர். இது மாத்திரமின்றி ஒரு கிலோ முன்நூறு ரூபாவுக்கு விக்கப்பட்ட சாளைமீன் ஆயிரம் ரூபாய்க்கு விக்கப்படுகின்றது இதனால் சாதாரண மக்கள் சாதார மீனை உண்ணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந் நிலை தொடர்ந்தால் பலதரப்பினர். மிகவும் மேசமான பட்டினியை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே அரசு மண்ணெண்ணையை மீனவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டுமென இதன்போது அவர்கள் தெரிவித்தனர். .






எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
நடாத்தும்



## பொன்.செல்வநாயகம்
எழுதிய

# மட்டக்களப்புத் தமிழக பாரம்பரிய மருத்துவம்

## புத்தக வெளியீட்டு விழா

காலம் :
**28.08.2022 ஞாயிறு**
**காலை 9.30 மணிக்கு**

இடம் :
**தேவநாயகம் மண்டபம்,**
**அரசடி, மட்டக்களப்பு**

*அனைவரையும்*
*கௌரவமாக அழைக்கின்றோம்..*

## நிகழ்வன :

**மங்கல விளக்கேற்றல்**

**தமிழ்த்தாய் வணக்கம்**
செல்வி நிகேதனா சிவநாதன்

**வரவேற்புரை**
செல்வி மகிஷா செல்வநாயகம்

**தலைமையுரை**

**புத்தக வெளியீட்டுரை**
குழந்தை எழுத்தாளர் டாக்டர் ஓ.கே.குணநாதன்
எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளரும்
இலங்கை இளைஞர் பாராளுமன்ற மேனாள் உதவிப் பணிப்பாளரும்

**புத்தக வெளியீடு**

**புத்தக நயவுரை**
முனைவர் ஞா.தில்லைநாதன்
கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் சிரேஷ்ட விரிவுரையாளர்

**அதிதிகள் பாராட்டுரை**

**படைப்பாளி கௌரவம்**

**நன்றியுரையும் ஏற்புரையும்**
நூலாசிரியர்

## தலைமை :

**வைத்தியநிபுணர் வ.வரணிதரன்**
வவுனியா மாவட்ட வைத்தியசாலை.

## முதன்மை அதிதிகள் :

**கௌரவ.சி.சந்திரகாந்தன்**
நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும்

**கௌரவ.கோ.கருணாகரம்**
நாடாளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு.க.கருணாகரன்**
மட்டக்களப்பு அரசாங்க அதிபர்

**கௌரவ.தி.சரவணபவான்**
மட்டக்களப்பு மாநகர முதல்வர்

## முதற்பிரதி பெறுநர்கள் :

**சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி**
மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர்

**எந்திரி மு.பத்மசுதன்**
வடக்கு கிழக்கு மாகாண ரெலிக்கொம் பொது முகாமையாளர்

**கலாநிதி சிவக்கொழுந்து பொன்னையா**
கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மேனாள் பீடாதிபதி

**திரு.இ.பஞ்சாமிர்தம்**
ஒப்பந்தகாரர்

## விஷேட அதிதிகள் :

**வைத்தியநிபுணர் வே.விவேகானந்தராசா**
கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் வேந்தர்

**பேராசிரியர் மா.செல்வராசா**
கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர்

**கௌரவ சீ.யோகேஸ்வரன்**
மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர்

## சிறப்பு அதிதிகள் :

**கலாநிதி சி.அமலநாதன்**
விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர்

**கலாநிதி மூ.கோபாலரெத்தினம்**
கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்

**அல்ஹாஜ்.யு.எல்.ஏ.அஸீஸ்**
கிழக்கு மாகாண முதலமைச்சின் மேனாள் செயலாளர்

**திரு.க.சிவநாதன்**
கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் மேனாள் செயலாளர்

**திரு சி.பாஸ்கரன்**
மீள் குடியேற்ற அமைச்சின் மேனாள் மேலதிக செயலாளர்

**வைத்திய நிபுணர் கு.த.சுந்தரேசன்**
கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட சிரேஷ்ட விரிவுரையாளர்

**வைத்திய கலாநிதி கு.சுகுணன்**
மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

**எந்திரி திருமதி.கலைவாணி வன்னியசிங்கம்**
வீதி அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண மேனாள் பணிப்பாளர்

**திரு.பூ.பிரசாந்தன்**
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய சம்மேளன மேனாள் உபதலைவர்

## கௌரவ அதிதிகள் :

**திரு.வெ.தவராசா.**
ஓட்டமாவடி பிரதேச செயலாளர்

**திரு.வ.வாசுதேவன்**
மண்முனை வடக்கு பிரதேச செயலாளர்

**திரு கா.சித்திரவேல்**
கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர்

**ஜனாப்.எஸ்.எல்.எம்.ஹனீபா**
சம்மாந்துறை பிரதேச செயலாளர்

**திருமதி.தெட்சணகௌரி தினேஷ்**
பட்டிப்பளை பிரதேச செயலாளர்

**திரு.சோ.ரங்கநாதன்**
நாவிதன்வெளி பிரதேச செயலாளர்

**திருமதி.ஜெயானந்தி திருச்செல்வம்**
வாழைச்சேனை பிரதேச செயலாளர்

**ஜனாப்.ஏ.ரி.எம்.றாபி**
அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர்

**ஜனாப்.ஏ.எம்.மாஹிர்**
கணக்காய்வு அத்தியட்சகர்